**செய்தி வெளியீடு எண்: 574**
**நாள்:02.10.2011.**

## நான்கு காவல்துறை அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவல் பதக்கங்கள் முதல்வர் ஆணை

**(1) சென்னை மாநகர காவல், மதுவிலக்கு அமலாக்க பிரிவில் கூடுதல் காவல் துணை ஆணையாளராகப் பணி புரிந்து வரும் திரு. எஸ். ஜெயக்குமார், (2) கிருஷ்ணகிரி மாவட்டம், குற்றம் பொறுப்பு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வரும் திரு. செ.ரா. செந்தில் குமார் (3) தருமபுரி மாவட்ட தொப்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு. து. சம்பத்குமார் (4) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் காவல் நிலையம், அயற்பணியில் அதியமான் கோட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலர் 1564 ஆகப் பணிபுரிந்து வரும் திரு. பெ. சின்னமாதன் ஆகியோருக்கு கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் பாராட்டத்தக்க அளவில் பணியாற்றியமைக்காக, 2011–ஆம் ஆண்டுக்கான காந்தியடிகள் காவலர் விருது வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது மேற்சொன்ன விருது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2012–ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன் பரிசுத்தொகையாக தலா ரூ. 20,000/–மும் அளிக்கப்படும்.**

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்
அரசு முதன்மைச் செயலாளர் (பொறுப்பு)
உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**